அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி
தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்ஜோதி

# வள்ளலார் சன்மார்க்க ஞானமுரசு

விளம்பி ஆண்டு ஆவணி - புரட்டாசி செப்டம்பர் 2018 முரசு 12 ஒலி 135



அகத்தே கருத்துப் புறத்துவெளுத்து இருந்த உலகர் அனைவரையும்
சகத்தே திருத்திச் சன்மார்க்க சங்கத்து அடைவித்திட அவரும்
இகத்தே பரத்தைப் பெற்று மகிழ்ந்திடுதற்கென்றே எனை இந்த
உகத்தே இறைவன் **வருவிக்க உற்றேன்** அருளைப் பெற்றேனே

- திருவருட்பா

பிரதி ஒன்றுக்கு ரூ. 10/- ஆண்டு சந்தா ரூ. 120/-

அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்ஜோதி

# ஆன்மீக சத்சங்க விழா

அக்டோபர்
06 மாலை முதல்
07 இரவு வரை
2018

**இடம்: இராமய்யர் திருமண மண்டபம்,**
வ.உ.சி வீதி, உடுமலைப்பேட்டை.

**தொடர்புக்கு:**
**95977 19535, 88385 40176**



## நிகழ்ச்சி நிரல்:-

## 06-10-2018 சனிக்கிழமை:-

மாலை 05:00-05:30:- திருவருட்பா பாராயணம்
05:31-07:00:- திருவருட்பா இசைக் கச்சேரி,
வழங்குபவர்: தயவுதிரு தியான் செந்தில் & குழுவினர், பொள்ளாச்சி.
இரவு 07:01-08:15:- சிறப்பு சத்சங்கம், தலைப்பு: வள்ளலாரின் வாழ்வும் வாக்கும்,
வழங்குபவர்: தயவுதிரு சுபாஷ் சந்திர போஸ் அவர்கள், உடுமலைப்பேட்டை.
இரவு 08:16-08:30:- தியானம் மற்றும் பிரார்த்தனை

## 07-10-2018 ஞாயிற்றுக்கிழமை:-

காலை 06:30-08:30:- அருட்பெருஞ்ஜோதி அகவல் பாராயணம்
09:00-09:15:- வரவேற்புரை
09:16-10:30:- சிறப்பு சத்சங்கம், தலைப்பு: திருவருட்பா எனும் தேன்,
வழங்குபவர்: தயவுதிரு சாது செல்வம் அவர்கள், திருவண்ணாமலை.
10:31-11:45:- சிறப்பு சத்சங்கம், தலைப்பு: மனம் அடங்கும் திறம் – மந்திரம்
வழங்குபவர்: தயவுதிரு மு.பா.பாபு அவர்கள், சென்னை.
பகல் 11:46-01:00:- கேள்வி பதில் நேரம்
பிற்பகல் 01:01-02:00:- உணவு இடைவேளை
02:01-03:00:- காணொளி காட்சி
03:01-04:30:- திருவருட்பா இசைக் கச்சேரி
வழங்குபவர்: தயவுதிரு ஜெயப்பிரகாஷ் நாராயணன் & குழுவினர்,சோமந்தரைசித்தூர்.
மாலை 04:31-06:00:- சிறப்பு சத்சங்கம், தலைப்பு: மனுமுறை கண்ட வாசகம்–ஓர் ஆய்வு
வழங்குபவர்: கோடையிடி புலவர் தயவுத்திரு கங்கை மணிமாறன் அவர்கள், குத்தாலம்
மாலை 06:01-07:00:- திருவருட்பா பக்தி பாராயணம் & தியானம்
இரவு 07:01-08:15:- சிறப்பு சத்சங்கம், தலைப்பு: நாம் பெறும் புருஷார்த்தம்,
வழங்குபவர்: தயவுதிரு ஜெய்சிங் லிங்கவாசன் அவர்கள், உடுமலைப்பேட்டை.
இரவு 08:16-08:30:- ஜோதி வழிபாடு.

**திருநாள் நினைத்தொழும் நன்னாள் – திருவருட்பா**
*அனைவரும் வருக! திருவருள் பெறுக!*

அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்ஜோதி

# தமிரபரணி மஹா புஷ்கரத்தில் திருவருட்பிரகாச வள்ளல் பெருமானாரின் 196ஆம் ஆண்டு வருவிக்கவுற்ற பெருவிழா அழைப்பிதழ்

**நாள்** : **21-10-2018, ஞாயிற்றுக் கிழமை**

**நேரம்** : **காலை 6:30 மணிமுதல் இரவு 8:30 மணிவரை**

**இடம்** : **சேனை தலைவர் மஹால்,**
சேனை தலைவர் சமுதாய வளாகம், **பாபநாசம்.**
திருநெல்வேலி.

**தொடர்புக்கு** : **88385 40176, 95977 19535**

நிகழ்ச்சி நிரல்:

| | |
|---|---|
| **6:30am - 8:30am** | : **அருட்பெருஞ்ஜோதி அகவல் பாராயணம்** |
| **9:00am - 9:30am** | : வரவேற்புரை |
| **9:31am - 10:30am** | : **வருவிக்கவுற்ற வள்ளல்** - விழா தலைமையுரை |
| வழங்குபவர் | : தவத்திரு **ஊரன் அடிகளார்,** வடலூர். |
| **10:31am - 11:30am** | : **அருள்நெறி ஒன்றே தெருள்நெறி** - சிறப்பு சத்சங்கம் |
| வழங்குபவர் | : தயவுதிரு **அழகர் ராமானுஜம்** அவர்கள், பேராவூரணி. |
| **11:31am - 12:30pm** | : **குடும்ப கோரம்** - சிறப்பு சத்சங்கம் |
| வழங்குபவர் | : தயவுதிரு **தம்பையா** அவர்கள், தஞ்சாவூர். |
| **12:31pm - 02:00pm** | : **வள்ளலார் வாழ்வியல்** - வில்லுப்பாட்டு |
| நிகழ்த்துவோர் | : தயவுதிரு **இராம பாண்டுரங்கனார்** அவர்கள், வடலூர்.<br>தயவுதிரு **ப. புருஷோத்தமன்** அவர்கள், நடுப்பட்டு.<br>தயவுதிரு **கிஷோர்** அவர்கள், கருங்குழி. |
| **02:01pm - 03:30pm** | : **உயிருள்யாம் எம்முள் உயிர்** - சிறப்பு சத்சங்கம் |
| வழங்குபவர் | : தயவுத் திருமதி **பிரபாவதி அம்மையார்,** சென்னை. |
| **03:31pm - 05:00pm** | : **தத்துவ வெற்றி** - சிறப்பு சத்சங்கம் |
| வழங்குபவர் | : கோடையிடி புலவர் தயவுதிரு **கங்கை மணிமாறன்** அவர்கள், குத்தாலம். |
| **05:01pm - 06:30pm** | : **திருஅருட்பா இசைக் கச்சேரி** |
| வழங்குபவர் | : தயவுதிரு **ஜீவ சீனுவாசன்** அவர்கள், திருக்கோவிலூர். |
| **06:31pm - 07:30pm** | : **அருட்பெருஞ்ஜோதி** - சிறப்பு சத்சங்கம் |
| வழங்குபவர் | : தயவுதிரு **பாலகிருஷ்ணன்** அவர்கள், சென்னை. |
| **07:31pm - 08:30pm** | : **சிவநேச வெண்பா உணர்த்தும் பக்தி நெறி** - சிறப்பு சத்சங்கம் |
| வழங்குபவர் | : தயவுதிரு **குஞ்சிதபாதம்** அவர்கள், கோவை. |
| **08:31pm** | : **நன்றியுரை** |

அனைவரும் வருக! குருவருள் பெறுக!



# திருச்செவிக்கு விண்ணப்பம்

திருஅருட்பா பக்திப் பாமாலை

## திருப்பள்ளி எழுச்சி

கல்லாய மனங்களும் கரையப்பொன் னொளிதான்
கண்டது கங்குலும் விண்டது தொண்டர்
பல்லாரு மெய்தினர் பாடிநின் றாடிப்
பரவுகின் றார் அன்பு விரவுகின் றாராய்
நல்லார் மெய்ஞ் ஞானிகள் யோகிகள் பிறரும்
நண்ணினர் சூழ்ந்தனர் புண்ணிய நிதியே
எல்லாஞ்செய் வல்லஎன் அருட்பெருஞ்ஜோதி
என்தெய்வ மேபள்ளி யெழுந்தருள் வாயே.

## பிரார்த்தனை மாலை

நவையே தருவஞ்ச நெஞ்சகம் மாயவும் நான் உன்அன்பர்
அவையே அணுகவும் ஆனந்த வாரியில் ஆடிடவும்
சுவையே அமுதன்ன நின்திரு நாமம் துதிக்கவும்ஆம்
இவையேஎன் எண்ணம் தணிகா சலத்துள் இருப்பவனே.

## இரந்த விண்ணப்பம்

வாழும் நின்திருத் தொண்டர்கள்
திருப்பதம் வழுத்திடா துலகத்தே
தாழும் வஞ்சர்பால் தாழும் என்தன்மை
என்தன்மை வன்பிறப்பாய
ஏழும் என்னதே ஆகியது
ஐயனே எவர்எனைப் பொருக்கின்றோர்
ஊழும் நீக்குறும் தணிகை
எம்அண்ணலே உயர்திரு வருள்தேனே.

## மருண்மாலை விண்ணப்பம்

சொல்லும் பொருளு மாய்நிறைந்த சுகமே அன்பர் துதிதுணையே
புல்லும் புகழ்சேர் நல்தணிகைப் பொருப்பின் மருந்தே பூரணமே
அல்லும் பகலும் நின்நாமம் அந்தோ நினைந்துன் ஆளாகேன்
கல்லும் பொருவா வன்மனத்தால் கலங்கா நின்றேன் கடையேனே.

# காணாத காட்சியும் அதுதரும் ஆட்சியும்

**இ**ந்த உலகத்தில் மொழி தெரியாத காலம் முதலே நம்மால் உணரப்பட்ட ஒன்று அன்பு. நாம் குழந்தையாய் இருந்தபோது மொழி தெரியாது. ஆனால், அந்த நிலையிலும் உணரப்பட்ட ஓர் உன்னத உணர்வே அன்பு.

அதுமட்டுமல்ல, நம்முடைய வயதான காலத்தில் கண் இருண்ட போதிலும், காதுகள் கேளாத தருணத்திலும், பேசமுடியாது உணர்வு குன்றியிருந்த காலத்திலும் நம்மால் உணரப்படுகின்ற ஒன்று அன்பு.

வாழ்கையில் நாம் அதிகம் சிந்திப்பதும், தேடுவதும், எதிர்பார்ப்பதும், வெற்றி கொள்ள நினைப்பதும், நமக்கு அவசியம் தேவைப்படுவதும் இந்த அன்புதான். ஆனால், இந்த அன்பை மிகக் குறைவாகவே நம்மால் வெளிப்படுத்தவும், புரிந்து கொள்ளவும் முடிகிறது என்பதை நாம் ஒப்புக்கொள்ளத்தான் வேண்டும். இதுபற்றிய உண்மைச் சம்பவங்களை இங்கே காண்போம்.

அமெரிக்காவைச் சேர்ந்த தாவரவியல் நிபுணரான லூதர் Luther A. Bur Bank என்பவர் 1904ஆம் ஆண்டில் ஓர் ஆய்வு மேற்கொண்டார். அதாவது, இவர் கள்ளிச் செடிகளை மிகவும் நேசித்தார். அதனால், இவரது ஆய்வுக் கூடத்தில் பலவகையான கள்ளிச் செடிகளை வளர்த்து வந்தார்.

பொதுவாக கள்ளிச் செடிகள் தன்னைக் காத்துக்கொள்ள முட்களை கொண்டிருக்கும். நம்மிடத்தில்தான் எந்த ஆபத்தும் இந்த கள்ளிச்செடிகளுக்கு இல்லையே என எண்ணி ஒரு கள்ளிச் செடியிடம் சென்று, “இங்கு உனக்கு எந்த ஆபத்தும் யாராலும் வராது” என அதனிடம் தொடர்ந்து அன்போடு சொல்லிக்கொண்டே வந்தார். என்ன ஆச்சர்யம்! சில காலம் கழித்து அந்த கள்ளிச்செடியில் தோன்றிய புதிய இலையில் முட்களே இல்லை.

அதுமட்டுமல்ல, பிரேசில் நாட்டில் வாழ்ந்த Joe perera desoaza என்ற கட்டுமானப் பணியாளர் கடற்கரையில் நடைப்பயிற்சி மேற்கொள்வதை வழக்கமாகக் கொண்டிருந்தார். இவர் ஒரு பெரிய கருணையாளரோ அல்லது ஆன்மீகவாதியோ இல்லை. ஒரு சாதாரண மனிதர்.

ஒருமுறை இவர் நடைபயிற்சி மேற்கொண்டபோது ஒரு சிறிய பென்குயின் பறவை அடிபட்டு தனியாகக் கிடப்பதைக் கண்டார். அதன் மீது இரக்கம் கொண்டு தன் இல்லத்திற்கு எடுத்துச் சென்று மருத்துவம் பார்த்தார். அது பரிபூரணமாக குணமடைய ஏறத்தாழ பதினோறு மாதங்கள் பிடித்தது.

*பிறகு, அதை கொண்டு சென்று, "இது தான் உன் வாழ்க்கை" என்று கூறி அதை கடற்கரையில் விட்டுவிட்டு வந்தார். இது நடந்தது 2011 ஆம் ஆண்டில்.*

*ஒரு வருடம் கழித்து அவர் வழக்கம்போல் நடைபயிற்சி முடித்துவிட்டு வீடு திரும்புகையில் தன்னை யாரோ பின்தொடர்வதை உணர்ந்தார். திரும்பிப் பார்த்தபோது ஒரு பென்குயின் பறவை மட்டுமே இருப்பதை கவனித்தார். அங்கு வேறு யாரும் இல்லை. எனவே, அவர் அதை பொருட்படுத்தாது வீடு திரும்பினார்.*

*ஆச்சர்யம் என்னவென்றால், பென்குயின் அவரைப் பின்தொடர்ந்து அவர் வீட்டிற்கே வந்துவிட்டது. ஏன் இது இங்கு வந்ததென்று ஆராய்ந்தபோது அது அவரால் ஒரு வருடத்திற்கு முன் காப்பாற்றப்பட்ட பறவை என்பதை உணர்ந்தார். அன்றிலிருந்து அப்பறவை ஒவ்வொரு வருடமும் எட்டு மாதங்கள் இவரது இல்லத்திலும் நான்கு மாதங்கள் ஐயாயிரம் கிலோமீட்டர் கடந்து அர்ஜென்டினாவிலும் வாழத் தொடங்கியது.*

**ஒரு தாவரமும் பறவையும் கூட நம்முடைய அன்பை புரிந்துகொண்டு திரும்பி செலுத்தும்போது ஏன் மனிதர்களாகிய நம்மால் முடியாது?**

*மேலும், இந்த உலகமே வெறுத்த ஒரு மனிதன் ஹிட்லர். ஏனென்றால், அவன் இந்த உலகத்தையே வெறுத்தான். ஏறத்தாழ ஆறு மில்லியன் யூதர்களைக் கொடூரமாக கொன்றான். அவன் எழுதிய* "Main Camp" *என்ற புத்தகத்தில் யூதர்களெல்லாம் எனக்கு கரப்பான் பூச்சியைப் போன்றவர்கள். அவர்களை நசுக்கிக்கொள்வேன் என எழுதியிருந்தான்.*

*இப்படிபட்ட கொடூரமான தன்மை கொண்ட ஹிட்லர் தன் வாழ்நாளில் ஒரு யூதரைக் காப்பாற்றி இருக்கின்றான். அவர் பெயர்* Dr. Edward Blatch. *ஹிட்லருக்கு அவனது தாயார் மீது அன்பு அதிகம். ஒருமுறை அவரது உடல்நிலை சரியில்லாதபோது இந்த யூத இனத்தைச் சேர்ந்த மருத்துவர் அவன் தாயை காப்பாற்றி இருக்கிறார். இதனால், 1940ஆம் ஆண்டில் இந்த மருத்துவரை தனது சொந்த பாதுகாப்பில் ஆஸ்ட்ரியாவிலிருந்து அமெரிக்காவிற்கு கொண்டு சேர்த்தான்.*

*அவன் உள்ளம் முழுதும் யூத இனத்தின் மீது வெறுப்பு கொண்டிருந்தபோதுகூட ஒரு யூதர் மீது அவனால் இரக்கம் கொள்ள முடிந்ததென்றால் அதற்குக் காரணம் அவன் தாயின் மீது வைத்த அன்பே. இதுவொரு சுயநல அன்புதான் என்றாலும், அந்த அன்புகூட ஹிட்லருக்குள் ஒரு மாற்றத்தை ஏற்படுத்தியது எனில் அன்பின் வலிமை எத்தகையது!*

*திரு. நெல்சன் மண்டேலா, தென்னாப்பிரிக்காவின் மக்களாட்சி முறையில் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் குடியரசுத் தலைவர் ஆவார். இதற்கு முன் இவர் நிறவெறிக்கு எதிராகப் போராடிய முக்கியத் தலைவர்களுள் ஒருவராக இருந்தார். அமைதிவழிப் போராளியாக இருந்த அவரை தேசத் துரோகம் செய்ததாகக் கூறி இருப்பத்து ஏழு ஆண்டுகள் ராபன் தீவில் உள்ள சிறைச்சாலையில் சிறிய அறையில் அடைக்கப்பட்டார். பின் 1990ஆம் ஆண்டு விடுதலை பெற்றார் என்பது நாம் அனைவரும் அறிந்த ஒன்றே. ஆனால், இவர் வாழ்ந்து காட்டிய மற்றொரு நிகழ்வுதான் நாம் இங்கே குறிப்பாக கவனிக்க வேண்டிய ஒன்று.*

*அதாவது, இவர் சிறையில் இருந்தபோது இவருடன் இவரது நண்பரான இஷுசிபாவும் (Isu chiba) இருந்தார். இவர் ஓர் வடஇந்திய பெண்ணை திருமணம் செய்து கொண்டார். திருமணம் முடிந்த அன்றே இவரையும் தேசத் துரோகக் குற்றம் சாட்டி சிறையிட்டது ஆங்கிலேய அரசு. இவர் அடைக்கப்பட்டிருந்த சிறைச்சாலையில் பொதுவாக ஒரு சட்டம் இருந்தது. அதாவது, சிறையில் இருக்கும் ஒருவரை பார்க்க வருவோர் ஒன்று ஆங்கிலத்தில் பேச வேண்டும் இல்லையேல் ஆப்பிரிக்க மொழியில் பேச வேண்டும். ஆனால், இஷுசிபாவின் மனைவிக்கோ ஹிந்தியைத் தவிர வேறு மொழி தெரியாது. சிறையிலிருக்கும் தன் கணவரைப் பார்க்க வரும்போதெல்லாம் ஏதும் பேச முடியாமல் கண்ணால் மட்டுமே கண்ணீரால் பேசிவிட்டுச் செல்வார். 17 வருடங்கள் இப்படியே கழிந்தன. ஒவ்வொரு முறையும் அவரது மனைவி வரும்போதெல்லாம் அவருக்கு வயதாவதைப் பார்த்துப் பார்த்து மனம் புழுங்கி வேதனைப்பட்டார். இதனால், ஆத்திரம் கொண்ட இஷுசிபா விடுதலை பெற்று வெளியே வந்ததும் இதற்குக் காரணமான வெள்ளையர்களை கொல்ல வேண்டுமென சினம் கொண்டிருந்தார்.*

*மண்டேலா அவர்கள், இதை உணர்ந்தவராய் இஷுசிபாவிடம், “நாம் விடுதலைப் பெற்று சென்றதும் ஒன்றை நிச்சயமாக செய்ய வேண்டும்” என்றார்.*

*அதற்கு இஷுசிபா, “என்ன செய்ய வேண்டும்?” எனக் கேட்டார். அதற்கு மண்டேலா அவர்கள், “நாம் இந்த துன்பத்தை அனுபவிக்க காரணமாயிருந்த ஒவ்வொரு ஆங்கிலேயர் இல்லத்திற்கும் சென்று அவர்களுடைய மனைவிமார்களின் கையினால் ஒரு கோப்பை தேனீர் அருந்த வேண்டும்” என்றார்.*

*இஷுசிபா ஒன்றும் விளங்காதவராய் அவர்முகத்தைப் பார்க்க மண்டேலா மீண்டும் தொடர்ந்தார், “இது நம்மால் அவர்களுடைய கணவன்மார்களுக்கு எந்த ஆபத்தும் இல்லை என நிரூபிப்பதற்காக” என்றார்.*

இதனைக் கூறிவிட்டு, **"கடலளவு வெறுப்பினால் நமக்கு எந்த முன்னேற்றமும் ஏற்படுவதில்லை. அதற்கு ஒரு கோப்பை அளவு அன்பு இருந்தாலே போதும்" என்றார்.** இந்த ஒரு வார்த்தை இஷூசிபாவின் வாழ்வையே மாற்றி அமைத்தது.

**இன்னா செய்தாரை ஒறுத்தல் அவர்நாண**
**நன்னயஞ் செய்து விடல்** என்று நம் திருவள்ளுவர் பெருந்தகையார் வாக்கினைப் பற்றி அறியாத தென்னாப்பிரிக்காவில் உள்ள நெல்சன் மண்டேலா வாழ்ந்திருக்கிறார் என்றால் **நம்மால் வாழ முடியாதா?**

மற்றுமோர் உண்மைச் சம்பவம். ஒருமுறை உடல் எடை கூடுதலாக உள்ள ரிக் என்பவருக்கு ஆண்குழந்தை பிறந்தது. அக்குழந்தைக்கு கழுத்து கொஞ்சம் கோணலாகவும், பெருமூளை வாதம் என்கிற நோயும் இருந்தது. அதாவது, அந்த குழந்தையின் உடலில் எந்த அசைவும் இருக்காது. அதனால் எதுவும் செய்ய முடியாது. இருந்தபோதும், ஒருவருடம் பொறுத்து பார்ப்போமே என்று எண்ணி அக்குழந்தையை பராமரித்து வந்தனர்.

ஒரு வருடம் சென்றும் எந்தவொரு மாற்றமும் அதனிடம் இல்லை. எனவே, அனேக குழந்தைநல மருத்துவர்களிடம் அழைத்துச் சென்று காண்பித்தனர். ஆனால், எல்லா மருத்துவர்களுமே அக்குழந்தையை பரிசோதித்துவிட்டு "இதனிடம் எந்த உயிரோட்டமும் இல்லை. இதற்காக நீங்கள் முயற்சி எடுப்பது வீண்தான். இதை ஏதாவது ஒரு குழந்தைள் நல காப்பகத்தில் சேர்த்துவிடுங்கள்" என்றனர்.

இருந்தபோதும், இந்த பெற்றோருக்கு அக்குழந்தையின் கண்கள் தங்களிடம் ஏதோ சொல்ல வருவதைப் போன்ற ஓர் உணர்வு. எனவே, அவர்களால் அக்குழந்தையை அனாதையாக விடுவதற்கு மனமில்லாமல் தங்கள் அரவணைப்பிலேயே வளர்த்தனர்.

இப்படியாக பதினோறு ஆண்டுகள் கழிந்தன. குழந்தை வளர்ந்ததேயன்றி எந்த முன்னேற்றமும் இல்லாததால் பெற்றோர்கள் சலிப்படைந்தனர். ஆனாலும், இந்தக் குழந்தை அவர்களிடம் தன் கண்களின் மூலம் ஏதோ சொல்ல வருவதை உணர்ந்தனர். எனவே, இருவரும் அக்குழந்தையை சிகிச்சைக்காக மிகப்பெரிய மருத்துவ பல்கலைக்கழகத்திற்கு அழைத்துச் சென்றனர்.

அங்கு கைதேர்ந்த மருத்துவர்கள், கணினி தொழில் நுட்பக் குழுவினர் என அனேகர் இருந்தனர். அனைவரும் இக்குழந்தையை பரிசோதித்துவிட்டு, இந்த குழந்தைக்கு மூளை இருப்பதாகவே தெரியவில்லை என்றனர். இருந்த போதும், ரிக் அங்கிருக்கும் மருத்துவர்களிடம், "இவன் ஏதோ சொல்ல நினைப்பதாக எனக்குத் தோன்றுகிறது.

இதை தொழில்நுட்ப கருவிகள் மூலமாக வெளிப்படும் விதமாய் ஏதேனும் செய்யுங்கள்” என்று மன்றாடினார்.

இந்த தந்தையின் உணர்வினைப் பார்த்து பரிவு கொண்ட மருத்துவர்கள் ஒரு சோதனை செய்தனர். ஒருசில தொழில்நுட்பத்தை பயன்படுத்தி இக்குழந்தை நினைப்பதை கணிணியில் எழுத்துக்களாக வருமாறு செய்தனர்.

ஓர் ஆச்சரியம் என்னவென்றால், அக்குழந்தை கணிணியின் வாயிலாக சொல்லிய முதல் வார்த்தை, “எனக்கு மூளை இருக்கிறது” என்று. இதைக் கண்டு அதிர்ச்சியடைந்த மருத்துவர்களுக்கு இக்குழந்தையால் தன்னைச் சுற்றி நடக்கும் அனைத்தையும் உணர்ந்து கொள்ள முடிகிறது என்பது தெரிந்தது. பிறகு, இந்தத் தொழில் நுட்பத்தை வைத்தே சிறப்பு பள்ளியில் சேர்த்து கல்வியும் கற்பித்தனர்.

சிலகாலம் கழித்து இந்த மகன் தன் தந்தையிடம், தனது நண்பன் ஒருவன் பக்கவாதத்தினால் பாதிக்கப்பட்டிருப்பதாகவும், அவனுக்கு தான் உதவி செய்ய வேண்டுமென்றும் கூறினான். மேலும், அவனுக்கு நிதியுதவி திரட்ட ஒரு ஓட்டப்பந்தையப் போட்டி அறிவித்துள்ளதாகவும் அதில், தான் கலந்து கொள்ள வேண்டும் எனவும் கூறினான்.

இதைக் கேட்டு ஆச்சரியமடைந்த தந்தை ரிக், சக்கர நாற்காலியிலிருந்து எழுந்திராத இவன் எப்படி கலந்து கொள்வான் என்ற ஐயப்பாடு இருந்தாலும் பிள்ளையின் சந்தோஷத்திற்காக சரி என ஒப்புக்கொண்டார்.

தன் வாழ்நாளில் ஒரு கிலோ மீட்டர் தூரம்கூட ஓடாத இந்த ரிக் தன் மகனின் மகிழ்ச்சிக்காக ஓடத் தொடங்கினார். அதுவும் தன் மகனை சக்கர நாற்காலியில் வைத்து தள்ளிக் கொண்டே ஓடுவார். இப்படியாக இவர் 1130 Endurance events, 72 Marathon, 7 Triathlon போன்ற கடினமான போட்டிகளிலும் தன் மகனின் மகிழ்ச்சிக்காக கலந்து கொண்டார்.

இறுதியாக நடந்த பாஸ்டன் மாரத்தானில் முதலிடம் பெற்ற போட்டியாளருக்கும் இவருக்குமான நேர இடைவெளி முப்பத்து ஐந்து நிமிடங்கள் மட்டுமே.

இதைக் கண்ட சக நண்பர்களில் ஒருவர், “நீ உன் மகனை வைத்துக் கொண்டு ஓடும்போதே இப்படியொரு சாதனை படைத்திருக்கிறாய் என்றால், உன் மகன் இல்லாமல் நீ மட்டும் ஓடினால் இந்த மாரத்தானில் முதலிடம் பெற்றிருக்கலாமே” எனக் கூறினார்.

அதற்கு ரிக், **“நான் மாரத்தானில் வெற்றிபெற ஓடவில்லை. என் மகனின் முகத்தில் எழும் புன்னகைக்காகவே ஓடினேன்”** என்றார்.

..09..

*இப்படியாக சில காலம் கழிந்தது. ஒருமுறை ரிக்கிற்கு இருதய பாதிப்பு வந்தது. அப்போது அவரது வயது அறுபத்து ஐந்து. அவர் மகனின் வயது நாற்பத்தி மூன்று.*

*மருத்துவர்கள் ரிக்கை பரிசோதனை செய்துவிட்டு “ரிக், நீங்கள் மட்டும் இந்த ஓட்டப்பந்தையங்களில் கலந்து கொள்ளாது போயிருந்தால் இருபது வருடங்களுக்கு முன்னதாகவே இறந்திருக்க வேண்டும்” என்றனர்.*

**“இதுநாள் வரை நாம்தான் நம் மகனை காப்பாற்றியதாக நினைத்திருந்தோம், ஆனால், நம் மகன்தான் நம்மைக் காப்பாற்றி இருக்கிறான்”** *என்ற உண்மை அப்போதுதான் ரிக்கிற்கு புரிந்தது. செயல்பாடற்ற ஒரு மகனின் அன்பு ஒரு தந்தையை காப்பாறியது என்றால் அன்பின் சக்தி வியப்பிற்குறியதல்லவா!*

*இத்தகைய அளப்பறிய சக்திவாய்ந்த அன்பை பற்றி யாரும் புரிந்து கொள்வதில்லை. நாம், பொதுவாக யாரும் நம்மீது அன்பு செலுத்துவதில்லையே என்கிறோம். கணவன், மனைவியிடம் அன்பை எதிர்பார்க்கிறார். மனைவி, கணவனிடம் அன்பை எதிர்பார்க்கிறார். இதுபோல் ஒருவர் மற்றவரிடம் அன்பை எதிர்பார்க்கின்றனர். ஆனால், உண்மையில்* **அன்பு என்பது பெறப்படுவதன்று; அது கொடுக்கப்படுவது.**

*ஒரு தாய் அதிகமாக சந்தோஷப்படுகிறாளா? அல்லது பிள்ளை அதிகமாக சந்தோஷப்படுகிறதா என்றால், தாய்தான் என்பதே சரியான பதில். ஏனென்றால், தாய் என்பவள் அன்பை கொடுப்பவளாக இருக்கிறாள். பிள்ளைகள் பெறுபவர்களாக இருக்கிறார்கள் என்பதை புரிந்து கொள்ள வேண்டும்.*

*அன்பு இல்லையானால், இந்த உலகம் சுடுகாடாக மாறிவிடும்.*

*அன்பு இல்லாதபோது, ஒரு வீடு காலையில் கிளம்பி மாலையில் வந்து தங்கி ஓய்வெடுத்துவிட்டுச் செல்லும் தங்கும் விடுதியாக மாறிவிடும்.*

*ஒரு குடும்பத்திற்குள் அன்பு இல்லையானால் அது ஒரு கேளிக்கை விடுதியைப்போல் மாறிவிடும்.*

*நம் தாத்தா பாட்டியிடம் உள்ள அன்பை எடுத்துவிட்டால் அவர்கள் வெறும் காப்பாளராக மாறிவிடுவர்.*

*அண்ணன் தங்கைக்கிடையே உள்ள அன்பை எடுத்துவிட்டால் அவர்கள் வழிப்பயணியைப் போல் மாறிவிடுவர்.*

*ஒரு சாதுவிடம் அன்பை எடுத்துவிட்டால் அவர் ஒரு ஆலோசகராக மட்டுமே இருப்பார். ஏன் கடவுளிடம் உள்ள அன்பை எடுத்துவிட்டால் அவர் வெறும் கற்பனையாகவே இருந்துவிடுவார்.*

*ஆகவே, அன்பு செலுத்துதல் என்பதன் முக்கியத்தை நாம் அனைவரும் உணர்ந்து கொள்ள வேண்டும்.*

*இந்த அன்பைப் பற்றிய புரிதல் இல்லாதபோதுதான் மிகவும் கீழான காரியங்களில் இறங்கிவிடுகிறான் மனிதன். இதற்கு, ஒருசில நடந்த சம்பவங்களைக் காண்போம்.*

*2010 ஆம் ஆண்டில் தென் கொரியாவைச் சேர்ந்த லீஜிங்கா என்பவன் அதிகாரப்பூர்வமாக ஒரு தலையணையை திருமணம் செய்து கொண்டான்.*

*2008ஆம் ஆண்டில் அமெரிக்க இராணுவத்தில் வீராங்கணையாக பணியாற்றிய எரிக் லா என்பவள் பாரீஸ் நகரில் உள்ள ஈஃபில் டவர் மீது காதல் கொண்டு அதை அதிகாரப்பூர்வமாக திருமணம் செய்து கொண்டதோடு தன்னை திருமதி. ஈஃபில் என்றே அழைத்துக் கொண்டாள்.*

*இந்தியாவைச் சேர்ந்தவள் ஆயிஷா. இவள் அடிக்கடி ஜெர்மன் சென்று வருவது வழக்கம். அப்போது அங்கிருக்கும் பெர்லின் சுவற்றின் மீது காதல் வந்தது. 1979ம் ஆண்டு அதை சட்டப் பூர்வமாக திருமணம் செய்து கொண்டாள். அந்த பெர்லின் சுவரை இடித்த பிறகு தன்னை விதவை எனவே அறிவித்துக் கொண்டாள்.*

*இதுபோல் இன்னும் பல அறிவற்ற சம்பவங்கள் இவ்வுலகில் நடந்து கொண்டுதான் இருக்கிறது. இதற்கு என்ன காரணம்?*

*இவர்களெல்லாம் பிறரிடம் அன்பு செலுத்தத் தெரியாமல் விரக்தியின் உச்சத்திற்கே சென்றதன் விளைவுதான் இது.*

*இந்த சம்பவங்களை இங்கே குறிப்பிடுவதற்குக் காரணம், நம்முடைய எதிர்காலச் சமுதாயமான நம் பிள்ளைகளும் வெளிநாட்டு மோகத்தில்தான் இருக்கிறார்கள்.*

*வரும் நாளில் இவர்கள் இதுபோன்ற அறிவற்ற செயல்களைச் செய்யாமல் தடுக்க வேண்டியது நம் ஒவ்வொருவரின் கடமை.*

*பொதுவாக, ஒரு குடும்பத்தில் தாய்தான் அதிகமாக உழைக்கிறாள். பிறர் நலன் குறித்து கவலை கொள்கிறாள். என்றாலும் அவளுக்கென எந்த மதிப்போ, பெயரோ வருவதில்லை.*

*ஆனால், சமீபத்தில் மேற்கொள்ளப்பட்ட ஓர் ஆய்வு என்ன கூறுகிறதென்றால்,* **ஒரு குடும்பத்தில் உள்ள உறுப்பினர்களில் தாயின் ஆயுட்காலம்தான் அதிகமாக உள்ளது. ஏனென்றால் தாய்தான் தன்னலம் கருதாது அன்பு செலுத்துபவராக இருக்கிறாள்.**

*ஆக, நாம் புரிந்து கொள்ள வேண்டியது என்னவென்றால்* **அன்பு என்பது பெறப்படுவதன்று அது கொடுக்கப்பட வேண்டிய ஒன்று. மேலும் அன்பு என்பது தன்னலம் கருதாதது.**

அதுமட்டுமல்ல, இதுவோர் தனிப்பட்ட உணர்வு. வணிகமாக்கப்பட வேண்டிய ஒன்றல்ல. ஏனென்றால், இக்காலத்தில் அன்பை மூலதனமாக வைத்துக்கூட வணிகம் நடக்கிறதே. அன்னையர் தினத்தன்று வியாபாரம் செய்யப்படும் வாழ்த்து அட்டைகள் எத்தனை! எத்தனை! மலர் கொத்துக்கள் எத்தனை! எத்தனை!

மேலும், அன்பு என்பது ஒரு குறுகிய வட்டத்திற்குள் அடைபட்டு கிடப்பதல்ல. அது, எல்லைகளற்று எல்லா உயிரையும் தன்னுயிர்போல் காண்பது. இதை "ஆன்மநேய ஒருமைப்பாட்டு உரிமை" என்பார் நம் வள்ளல் பெருமானார். இந்த உரிமைத் தன்மையை உணர வேண்டுமானால், ஓரறிவு முதல் ஆறறிவு வரையுள்ள ஜீவர்களாகிய நாம் அனைவரும் கடவுளாகிய தாய் தந்தைக்குப் பிறந்தவர்கள் என்பதை உணர்ந்திருக்க வேண்டும். அந்த வகையில் பார்த்தால் நாம் அனைவரும் சகோதரர்களே என்பது புலப்படும்.

சந்திரனிலிருந்து காணும்போது இந்த பூமியில் ஆசியா என்றும், இந்தியா என்றும், அமெரிக்கா என்றும் எந்த பேதமும் தெரிவதில்லை. அதுபோல் நாமனைவரும் ஆன்மா என்ற நிலையிலிருந்து பார்த்தால் ஜீவர்களாகிய நம்மிடையே எந்த பேதங்களும் இல்லை.

ஆனால், இதை உணர்ந்து கொள்ள முடியாமல் நமது ஆன்ம அறிவு என்கிற கண்ணானது அஞ்ஞானத்தினால் மிகவும் ஒளி மழுங்கி இருக்கிறது. இதனால் ஆன்மாவிற்கு உபகாரமாக இருக்கும் மனம் முதலான கண்ணாடிகளும் பிரகாச பிரதிபலிதமில்லாமல் தடிப்புள்ளவைகளாக இருக்கிறது.

இந்நிலை மாற வேண்டுமென்றால், "எல்லா உயிரையும் தன்னுயிரைப்போல பார்க்கும் உணர்வினை வருவித்துக் கொள்ள வேண்டும்" என்கிறார் நம் வள்ளல் பெருமானார்.

எல்லா உயிரையும் தன்னுயிராய் எண்ணினால் மட்டுமே அனைத்து பேதங்களும் நீங்கி ஆன்ம நேயம் மேலோங்கி உண்மையான அன்பு வெளிப்படும். இந்த உண்மை அன்பினால்தான் இந்த பூமியே அமைதிப்பூங்காவாகத் திகழும்.

கருணை ஒன்றே வடிவாகி எவ்வுயிரும்
    தம்உயிர்போல் கண்டு ஞானத்
தெருள் நெறியில் சுத்தசிவ சன்மார்க்கப்
    பெருநீதி செலுத்தா நின்ற
பொருள்நெறி சற்குணசாந்தப் புண்ணியர்தம்
    திருவாயால் புகன்ற வார்த்தை
அருள்நெறி வேதாகமத்தின் அடிமுடிசொல்
    வார்த்தைகள்என்று அறைவ ராலோ - **பராபரன் உண்மை நிலையம்**

# வருவிக்கவுற்ற வள்ளல்

இப்புவியில் உள்ள உயிரினங்கள் யாவற்றிற்கும் "தோற்றம் உண்டேல் மரணம் உண்டு" என்பது கூற்று. இக்கூற்றினை தவிர்ப்பதற்கு சமய மத யோகியர்களும் மற்றும் ஞானியர்களும் முக்தியடைவதையே முழுமையான முடிபாகக் கற்பித்துக் கொண்டிருந்தனர்.

**முத்தியிலும் தேகமிசை மூவிதமாம் சித்தி பெற்றோர்**
**எத்தனைபேர் என்றுரைப்பது எந்தாய் பராபரமே**

என பராபரக்கண்ணியில் தாயுமானவ சுவாமிகள் அருளியிருப்பதை காணும்போது, மேலோர் வகுத்த முத்திக்கும் மேலான சித்தி என்னும் நிலையொன்று இருக்கிறது என்பதை அறிய முடிகிறது.

**பந்தமில் சிவத்தை வடிவொடும் அடையும் பகுத்து...**

இஃது, குமாரத் தேவர் அருளிய சுத்த சாதகம் எனும் நூலில் காணப்பட்டது. இதில் தொட்ட இடமெல்லாம் தத்துவமசி வாக்கியத்தின் உண்மைப் பொருளும், மரணமிலாப் பெருவாழ்வைப் பற்றியும் அறிவுறுத்தப்படுகின்றது. இதனின்று, சாமாறு எனும் மரணம் தவிர்த்து ஆமாறு என்னும் உடம்போடு உரைதலாகிய மெய்ஞான விஞ்ஞானம் தொன்மையானது என அறியமுடிகிறது. சித்தர் இடைக்காடரின் பாடலொன்று இதற்குச் சான்றாய் விளங்குகின்றது.

**சாகாதிருப்பதற்குத் தான்கற்ற கல்வியன்றோ**
**வாகான மெய்க்கல்வி? வகுத்தறிநீ கல்மனமே!**
**சாதனங்கள் செய்தவர்கள் சாவார் குயிலே!**

மேலும், சாகாக் கல்வியினைப் பற்றிய சிந்தனை திருமூலர் திருமந்திரத்திலும், அருளாளர்களின் அருட்பாடல்களிலும், நால்வர்களின் திருமுறைகளிலும், ஆழ்வார்களின் பாசுரங்களிலும் வெளிப்படுகின்றது. ஆனால், இவர்கள் எழுதியது ஏட்டோடும், வாழ்ந்த வாழ்வோடும் மறைந்து மனித சமுதாயம் மீண்டும் மரணத்தையே ஏற்றுக் கொண்டது.

இம்மேலான பெருவாழ்வைப் பற்றிய முழுமையான, தெளிவான சிந்தனையை மனித குலத்திற்கு சீராய் பகர்ந்திட யாரால் ஆகுமென ஆய்ந்து, அம்மரபிலே சான்றாய் வாழ்ந்திட திருவருட்பிரகாச வள்ளல் பெருமானார் இப்புவிக்கு இறைவனால் வருவிக்கவுற்றார்.

இத்தகைய மரணமிலாப் பெருவாழ்வினை வள்ளல் பெருமானார் எங்ஙனம் மேலோர் பகர்ந்ததிலிருந்து மாறுபட்டு எளிய முறையில் மனித குலத்திற்கு அருளினார் என காண்போம்.

**சாகாத கல்வியே கல்வி; ஒன்றே சிவம்;**
**தான்என அறிந்தஅறிவே**
**தகும்அறிவு; மலம் ஐந்தும் வென்ற வல்லபமே**
**தனித்த பூரண வல்லபம்;**
**வேகாத காலாதி கண்டுகொண்டு எப்பொருளும்**
**விளைய விளைவித்த தொழிலே**
**மெய்த்தொழிலதாகும்; இந்நான்கையும் ஒருங்கே**
**வியந்தடைந்து உலகம் எல்லாம்**
**மாகாதல் உறஎலாம் வல்ல சித்தாகி நிறைவான**
**வரமே இன்பமாம்;**
**மன்னும் இது நீபெற்ற சுத்த சன்மார்க்கத்தின்**
**மரபென்று உரைத்த குருவே;**
**தேகாதி மூன்றும் நான் தருமுன் அருள்செய்து**
**எனைத் தேற்றி அருள்செய்த சிவமே;**
**சிற்சபையின் நடுநின்ற ஒன்றான கடவுளே**
**தெய்வ நடராஜபதியே — திருவருட்பா; நடராஜபதி மாலை.**

*இறவாமைக்குக் காரணமான கல்வியே உண்மையான கல்வி; ஒன்றே சிவம், அந்த சிவமும் தானே என அறிந்த அறிவே தகும் அறிவு; ஆணவம், கன்மம், மாயை, திரோதாயை, மாமாயை என்ற மலம் ஐந்தையும் வென்ற ஆற்றலே தனித்த குறைவற்ற ஆற்றல் என்றும்;*

*வேகாத காற்று முதலியன கொண்டு எப்பொருளும் பயன் உண்டாகத் தோற்றுவிக்கும் தொழிலே உண்மையான தொழிலாம் என்றும்; இந்நான்கையும் ஒருங்கே கைவரப்பெற்று உலகம் எல்லாம் மிக்க அன்பு கொள்ள எல்லாம் வல்ல சித்துப் பொருளாகி நிறைந்த நிறைவே மேலான இன்பமாம்; இந்த இன்பத்தைப் பெற்ற நீயே சுத்த சன்மார்க்கத்தின் மரபினன் ஆவாய் என்று கூறிய குருவே!*

*உடல், மனம், வாக்கு என்னும் மூன்றையும் நான் தருமுன் எனக்கு அருள்செய்து அவற்றை இயக்குதற்குறிய நெறியைத் தெரிவித்த சிவபரம் பொருளே! சிற்சபையின் நடுவில் நின்று விளங்கும் ஒன்றான இறைவனே! தெய்வமான கூத்தப் பெருமானே, உமை வணங்குகின்றேன் என நம் வள்ளல் பெருமானார் சாகாக் கல்வியின் ரகசியத்தையும் அதன் மாண்பினையும், இறைவனே குருவாக வந்து உபதேசம் தந்ததாக தனது அருட்பாவில் அருளியுள்ளார்கள்.*

*இதற்கு ஒப்பீடான ஔவையின் பாடல் ஒன்றைக் காண்போம்.*

**ஒன்றாகக் காண்பதே காட்சி புலனைந்தும்**
**வென்றான்தன் வீரமே வீரம் – என்றானும்**
**சாவாமல் கற்பதே கல்வி தனைப்பிறர்**
**ஏவாமல் உண்பதே ஊண் .** – *தனிச்செயுட் சிந்தாமணி*

ஔவையின் பாடலில் பாடப்பட்ட வரிகளுக்கும், திருஅருட்பாவில் பாடப்பட்ட வரிகளுக்கும் உள்ள ஒற்றுமை வேற்றுமையைக் கண்ணுறுவோம்.

| ஔவையார் | வள்ளலார் |
|---|---|
| 1) ஒன்றாகக் காண்பதே காட்சி | ஒன்றே சிவம். அந்த சிவம் தானே என அறிந்த அறிவே தகும் அறிவு. |
| 2) புலன் ஐந்தும் வென்றான்தன் வீரமே வீரம் | மலம் ஐந்தும் வென்ற வல்லபமே தனித்த பூரண வல்லபம். |
| 3) சாகாமல் கற்பதே கல்வி | சாகாத கல்வியே கல்வி |

இதில் குறிப்பிடத்தக்கது யாதெனில், ஔவை ஒன்றாகக் காண்பதே காட்சி எனவும், புலன் ஐந்தினையும் வெல்வதையே வீரம் என்றும், சாகாமல் கற்பதே கல்வி என்றும் அருளியுள்ளார்.

ஆனால், நம் வள்ளல் பெருமானாரோ, ஒன்றே சிவம். அந்த சிவம் தானே என அறிந்த அறிவே தகும் அறிவு என்றும், மலம் ஐந்தையும் வென்ற ஆற்றலே சிறந்த முழுமையான ஆற்றல் என்றும், சாகாத கல்வியே கல்வி என்றும் அருளியிருப்பது இதனின்றும் மேன்மையானதோர் மார்க்கத்தைக் காட்டுகின்றார்.

நம் வள்ளல் பெருமானார் அருளிய சன்மார்க்க நெறியின் மூலம் பெறப்படுகின்ற புருடார்த்தங்கள் நான்கு. அவைகளாவன, ஏமசித்தி[1], சாகாக் கல்வி[2], தத்துவ நிக்கிரகம் செய்தல்[3], கடவுள் நிலையறிந்து அம்மயமாதல்[4]. இஃது சித்தி வல்லபத்தை அளிப்பதற்காக உபதேசிக்கப்பட்டதாகும்.

ஆனால், தொன்றுதொட்டு வருகின்ற புருடார்த்தங்களான அறம், பொருள், இன்பம், வீடு என்பன முத்தியை மட்டும் குறிப்பதாகவே இருக்கிறது.

சன்மார்க்க நெறியில் உபதேசிக்கப்பட்ட புருடார்த்தங்கள் சித்தியைப் பெற்றுத்தர வல்லத்தக்கதாகும்.

*தத்துவ நிக்கிரகம் செய்வதனால் கடவுள் நிலையறிந்து அம்மயமாகலாம். கடவுள் நிலையறிந்து அம்மயமானால் எல்லாம் வல்ல சித்தியும், சாகாக் கலையும் கைகூடும். தத்துவ நிக்கிரகம் சாதனம். மற்ற மூன்றும் அதனால் பெறக்கூடிய சாத்திய நிலைகள். இம்மூன்றில் கடவுள் நிலையறிந்து அம்மயமாதல், எல்லாம் வல்ல சித்தி என்ற இரண்டும் சாகாக் கல்வியில் அடங்கும். அடங்கவே, முடிவாக பெறவேண்டிய பேறு சாகாக் கல்வியாகிய மரணமிலாப் பெருவாழ்வு. அதனைப் பெறுவதற்கான சாதனம் தத்துவ நிக்கிரகமே.*

*தத்துவங்களை வென்றால் மரணமிலாப் பெருவாழ்வைப் பெறலாம். நம் வள்ளல் பெருமானார், தத்துவங்களை வென்று மரணமிலாப் பெருவாழ்வைப் பெற்றவர். அதனால், தன் அனுபவத்தை திருவருட்பாவில் 'தத்துவ வெற்றி' என்கின்ற பதிகமே பாடியுள்ளார்.*

**மரணம்எனும் பெருந்திருட்டு மாபாவிப் பயலே**
**வையகமும் வானகமும் மற்றகமும் கடந்தே**
**பரணமுறு பேரிருட்டுப் பெருநிலமும் தாண்டிப்**
**பசைஅற நீ ஒழிந்திடுக இங்கிருந்தாய் எனிலோ**
**இரணமுறு உனைமுழுதும் மடித்திடுவேன் இதுதான்**
**என்னுடையான் அருள்ஆணை என்குருமேல் ஆணை**
**அரணுறும் என்தனைவிடுத்தே ஓடுகநீ நான்தான்**
**அருட்பெருஞ்ஜோதிப் பதியை அடைந்த பிள்ளை காணே.**

*மேற்சொன்ன புருஷார்த்தங்களை பெறுவதற்கான சன்மார்க்கப் பெருநெறி ஒழுக்கங்கள் இந்திரிய ஒழுக்கம், கரண ஒழுக்கம், ஜீவ ஒழுக்கம், ஆன்ம ஒழுக்கம் என்பனவாம். இவற்றை வள்ளல் பெருமான் அருளிய உரைநடைப் பகுதி என்ற நூலில் காண்க.*

*சன்மார்க்கத்தின் முடிவு மரணமிலாப் பெருவாழ்வு. இதனை வள்ளல் பெருமானார்* **"சாகாதவனே சன்மார்க்கி"** *என்கின்றார். இவ்வனுபவங்கள் அருட்பா பாசுரங்களில் அநேக இடங்களில் அருளப்பட்டுள்ளது.* **"என்மார்க்கம் இறப்பொழிக்கும் சன்மார்க்கம் தானே"** *என திருவருட்பா ஞானசரியை பாசுரத்தில் அருளியிருப்பது கருதற்குறியது.*

*நம் வள்ளல் பெருமானார் உயிர் அனுபவம், அருளனுபவம், சிவ அனுபவம் என்ற மூன்று அனுபவங்களையும்; அன்புருவம், அருளுருவம், இன்புருவம் என்ற மூன்று உருவங்களையும்; சுத்த தேகம், பிரணவ தேகம், ஞான தேகம் என்ற மூன்று தேகங்களையும்; கரும சித்தி, யோக சித்தி, ஞான சித்தி என்ற மூன்று சித்திகளையும் பெற்று பரிபூரணராய் அத்துவிதமாய் பேரின்ப சித்தி அடைந்ததற்கான சான்றினை அருட்பாவில் அருளியுள்ளார்.*

நம் வள்ளல் பெருமானார் பசுகரணமெல்லாம் இறையருளால் பதிகரணமாக்கி இறைபொருளை தன் பௌதிக உடம்பினுள் வேதிக்கச் செய்து அருள் பூரணராய் விளங்குகின்றார். இவ்வரியதொரு மெய்ஞான விஞ்ஞானத்தை இப்புவியில் உள்ள உயிர்க்குலம் அறிந்து கொள்ள அவரே பெரும் சாட்சியாய் இருக்கின்றார்.

இது நிற்க. நம் பெருமானார் சித்திநிலையடைந்த நாள் முதலாய் இன்றளவும் சாதாரண மனிதன் தொடங்கி அறிவியலார் வரை அனைவருமே இந்தப் பெருவாழ்வினைப் பற்றி சிந்திக்கத் தொடங்கியுள்ளனர். இன்றைய விஞ்ஞானத்தில் ரிச் வாக்கர், மேத்தீவ் கோடன் என்ற இரு விஞ்ஞானிகள் 'பையானிக் மேன்' என்ற தொழில் நுட்பத்தை அறிமுகப்படுத்துகின்றனர். இதன் மூலம் மனிதன் தன் வாழ்நாளை நீட்டிக்கப்பண்ணலாம்.

ஆனால், இது உண்மையான மார்க்கம் அல்ல. எனென்றால், இஃது மனிதனின் குணத்தை மாற்றாது. ஆன்மாவில் உள்ள மலங்களையோ நீக்காது.

இந்த உடல் என்பது இறைவனால் படைக்கப்பட்ட தெய்வீக அமைப்பு. எனவே, இறைவழியில் வாழ்ந்துதான் நாம் மேற்சொன்ன சித்தி முத்தி நிலைகளை அடைதல் கூடும். மேலும்,

**தந்தை தன்மையே தனையன்தன் தன்மை**
**என்று சாற்றுதல் சத்தியம் கண்டீர்**
**எந்தை எம்பிரான் ஐந்தொழில் புரியும்**
**இறைவன் மன்றுளே இயல்நடம் புரிவான்**
**மைந்தன் என்றுஎன்னை ஆண்டவன் எல்லாம்**
**வல்ல நாயகன் நல்லசீர் உடையான்**
**அந்தணாளன்மெய்அறிவுடையவன் என்**
**அப்பன் தன்மைஎன் தன்மை என்றறிமின்.**

என்ற திருஅருட்பா பாசுரத்திற்கிணங்க ஜீவர்களாகிய நாம் அனைவரும் நம் தந்தையாம் இறைவனின் தன்மை அறிந்து அதன்படி வாழ்வதே மெய்யான வாழ்வு. இதனையே தொல்காப்பியமும் "தந்தையை ஒப்பர் மக்கள்" என்கிறது. ஆகவே, திசைமாறித் திரிகின்ற நமக்கு நம் தந்தையாம் இறைவனின் தன்மை இன்னதென தெரிவித்து அவரிடம் சேர்ப்பித்து நம்மை பேரானந்த நிலையில் இருத்தவே நம் வள்ளல் பெருமானார் இப்பூவுலகிற்கு வருவிக்கவுற்றார். இதை உணர்ந்து அவர் வகுத்தருளிய சுத்த சன்மார்க்க நெறியைக் கடைபிடித்து வாழ்வதே நாம் பெருமானாருக்கு செலுத்தும் குருகாணிக்கையாகும். ஒருநெறியாம் சன்மார்க்கப் பெருநெறியில் வாழ்வோம்! மேன்மையடைவோம்!

**Advertisement**

## மகாமந்திரம்

அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி
தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்ஜோதி

வடலூர் சித்தி வளாகம் என்கின்ற மேட்டு குப்பத்தில் நடைபெறும் பசி பிணி போக்கும் திரு பணிக்கு உதவ அனுகுவீர்.

திரு. நந்தி சரவணன் ஐயா
9842679999 / 9442327059

திருவருள் துணையுடன்

BNS ∝ Wings of Wisdom

# eXS Lending Library

## எக்சஸ் வாடகை நூலகம்

**Books for All Ages**

| Unlimited Books Starts @ INR 1200/. | |
|---|---|
| Scheme | Books at a Time |
| Super Reader | 10 |
| Book Lover | 5 |
| Elite Reader | 4 |
| Language Reader | 3 |
| Smart Reader | 1 |
| Door Delivery Available* | |

**HABITUAL READER**

# Pay as you take and read, like 10% to 15% on book cost of 15 days.

# % may change based on books popularity, availablity and price

# SOULFUL HOME

**Schemes starts @ INR 2400/=**

| Sno | Facilities | Super | Max | Book Max | Mag Max |
|---|---|---|---|---|---|
| 1 | Books | 30 | 15 | 7 | 2 |
| 2 | Magazines | 15 | 10 | 5 | 5 |
| 3 | Scheduled Visits | 12 | 12 | 12 | 24 |
| 4 | Unscheduled Visits | 6 | 6 | 3 | 0 |

Deposit INR - 500/



**Key advantages**

1. Lifetime membership @ 100% refundable deposit INR 500/=
2. Reading charges starts @10%
3. Hassle free door step service available

AYYAPPAN THANGAL 26792007 / VALASARAVAKKAM 42105700 / PORUR 42107304 / OMR 42863478 / VADAPALANI 42642491



தலை குனிந்து என்னை பார் .....
தலை நிமிர்ந்து
உன்னை நடக்க வைக்கின்றேன் – புத்தகம்

9444 408 804

# அருட்பெருஞ்ஜோதி அகவல் விளக்கம்

**தவத்திரு ஊரன் அடிகள் உரையிலிருந்து...**

**எட்டு இரண்டு அறிவித்து, எனைத் தனி ஏற்றி,**
**பட்டி மண்டபத்தில் பதித்த மெய்தந்தையே**

*எட்டு* - *எட்டையும்; எட்டு என்றால் என்ன என்பதையும்*

*இரண்டு* - *இரண்டையும்; இரண்டு என்றால் என்ன என்பதையும்;*

*அறிவித்து* - *தெரிவித்து*

*எனைத் தனி ஏற்றி* - *என்னை ஒப்பற்ற பெருநிலைக்கு ஏற்றி*

*பட்டிமண்டபத்தில்* - *பட்டிமண்டபத்தில்*

*பதித்த* - *ஏறச்செய்த; ஏற்றிய*

*மெய்தந்தையே* - *சத்தியத் தந்தையாம் அருட்பெருஞ்ஜோதியே!*

*எட்டிரண்டு, பட்டிமண்டபம் ஆகிய இவ்விரண்டும் அருள் நெறியில் கைவரப்பெறும் இரண்டு பேரனுபவங்கள், பெரும் பேரனுபவங்கள்.*

*எட்டையும் இரண்டையும் கூட்டினால் பத்து. எட்டும் இரண்டும் 8+2 = 10. இது தெரியாதா? என்று கேட்கலாம்.*

*எட்டும் இரண்டும் பத்து என்பது பலருக்கும் தெரியும். எழுத்தறிவில்லாத பால்காரருக்கும் தயிற்காரிக்கும்கூடத் தெரியும். எட்டும் இரண்டும் பத்து என்பது பலரும் அறிந்த வெளிப்படைப்பொருள். ஆயினும், அதன் உட்பொருள் வேறு. அம்மறைபொருளில்தான் பெரியோர் பலரும் இதை வழங்கி வருகின்றனர். எட்டிரண்டைப் பற்றிப் பெரியோர்கள் என்ன சொல்கிறார்கள் என்பதைக் காண்போம்.*

**எட்டும் இரண்டும் இனிதறி கின்றிலர்**
**எட்டும் இரண்டும் அறியாத ஏழையர்**
**எட்டும் இரண்டும் இருமூன்று நான்கெனப்**
**பட்டது சித்தாந்த சன்மார்க்க பாதமே.** - *திருமந்திரம் 986*

**எட்டும் இரண்டும் அறியாத என்னை**
**எட்டும் இரண்டும் அறிவித்தான் என்நந்தி**
**எட்டும் இரண்டும் அறிவால் அறிந்தபின்**
**எட்டும் இரண்டும் இலிங்கம் தாமே** - *திருமந்திரம் 3070*

*எட்டும் இரண்டும் அறியாத எனக்கு எட்டும் இரண்டும் அறிவித்தான் என்நந்தி என்கிறார். மாணிக்கவாசகரும் இப்படியே சொல்கிறார்.*

**கட்டறுத்து எனை ஆண்டு கண்ணாரநீறு**
**இட்ட அன்பரொடு யாவருங் காணவே**
**பட்டிமண்டபம் ஏற்றினை ஏற்றினை**
**எட்டினோடு இரண்டும் அறியே னையே.** - திருவாசகம் 53

*இனி திருவருட்பாவில் எட்டும் இரண்டும் வரும் இடங்களைக் காண்போம்.*

**பெட்டி இதில் உலவாத பெரும்பொருள் உண்டு இதுநீ**
**பெறுக என அதுதிறக்கும் பெருந்திறவுகோலும்**
**எட்டிரண்டும் தெரியாதேன் என்கையிலே கொடுத்தீர் - 3781**

**நட்டானை நட்ட எனை நயந்து கொண்டே**
**நன்மகன் நீ அஞ்சல் என நவின்றென் சென்னி**
**தொட்டானை எட்டிரண்டும் சொல்லினானை - 3946**

**எட்டிரண்டும் என்னென்றால் மயங்கிய என்றனக்கே**
**எட்டாத நிலையெல்லாம் எட்டுவித்த குருவே - 3946**

**எட்டும் இரண்டுமென்றிட்டு வழுங்குதல்**
**எட்டும்படி செய்தீர் வாரீர்**
**எட்டுரு வாயினீர் வாரீர்**

**எட்டுக் கிசைந்த இரண்டும் எனக்கிசைவித்(து)......-4871**

**எட்டும் இரண்டும் இதுஎன் றெனக்குச் சுட்டி காட்டியே - 5011**

**கட்டோடே கனத்தோடே வாழ்கின்றோம் என்பீர்**
**எட்டோடே இரண்டுசேர்த் தெண்ணவும் அறியீர் - 5556**

*இனி எட்டிரண்டின் உட்பொருளுக்கு வருவோம்.*

*எட்டு என்பது தமிழில் "அ" என்று (அகரமாக) எழுதப்பெறும். இரண்டு என்பது " உ" என்று (உகரமாக) எழுதப்பெறும்.*

*அகரமும் உகரமும் சேர்ந்தது ஓங்காரம். அ + உ (ம்) = ஓம்*

எட்டும் இரண்டும் தெரியாதவன் என்றால் அகர உகரங்கள் சேர்ந்த ஓங்காரத்தைத் தெரியாதவன் என்று பொருள். இனிவேறு பொருள்:

எட்டும் இரண்டும் சேர்ந்தால் பத்து 8 + 2 = 10. தமிழில் பத்து என்ற எண் யகரமாக எழுதப்பெறும். பஞ்சாக்கரத்துள் (சிவயநம) **ய**கரமாகிய நடு எழுத்து **ஆன்மாவைக்** குறிக்கும்.

எட்டிரண்டும் அறியாமை என்பதற்கு, எட்டிரண்டும் பத்து, பத்தாகிய (யகரமாகிய) ஆன்மாவை அறியாமை என்று பொருள். இது அகர உகரங்களை எண்ணாகக் கூறும் பொருள்.

மேலும், **"எட்டும் இரண்டும் இருமூன்று நான்கெனப் பட்டது சித்தாந்த சன்மார்க்க பாதமே"** என்னும் திருமந்திரத்துள், இரண்டு மூன்றும் ஒரு நான்கும் சேர்ந்தது பத்து எனக் கூறப்பட்டது. பத்து = ய, யகரமாவது ஆன்மா, ஆன்மாவை அறியாமை, தன்னை அறியாமை என்பது பொருள். எட்டிரண்டும் அறியாமை என்பதற்கு ஓங்காரத்தை அறியாமை, ஆன்மாவாகிய தன்னை அறியாமை என இரண்டு பொருள்கள்.

எட்டும் இரண்டும் அறிதல் என்பதற்கு, யோகமார்க்கப் பொருள் ஓங்காரத்தை அறிதல். ஞானமார்க்கப் பொருள் ஆன்மாவாகிய தன்னை அறிதல். வேதாந்தப் பொருள் ஓங்காரத்தை அறிதல். சித்தாந்தப் பொருள் தன்னை அறிதல். இச்சித்தாந்தப்பொருள் சன்மார்க்கத்துக்கும் பொருந்தும். "சித்தாந்த சன்மார்க்க பாதமே" என்பது திருமூலர் திருமந்திரம். மேலும்,

**என்னை அறிந்திலேன் இத்தனை காலமும்**
**என்னை அறிந்தபின் ஏதும் அறிந்திலேன்**
**என்னை அறிந்திட் டிருத்தலும் கைவிடா**
**தென்னை யிட்டென்னை உசாவுகின் றானே** என்று கூறுவார். இக்கருத்தையே நம் வள்ளற்பெருமான், **"தன்னை அறிந்து இன்பமுற வெண்ணிலாவே ஒரு தந்திரம் நீ சொல்ல வேண்டும் வெண்ணிலாவே"** என்பார். இதுகாறும் எட்டிரண்டின் பொருளை கண்டோம். இனி பட்டிமண்டபத்தை ஒருசிறிது பார்ப்போம்.

இன்றைய பட்டிமன்றங்கள் வேறு. முற்காலப் பட்டிமண்டபங்கள் வேறு. இன்றைய பட்டிமன்றம் புலவர்கள் இலக்கியவாதம் செய்வது. அன்றைய பட்டிமண்டபம் தத்துவமும் சமய சாத்திரங்களும் முற்றக்கற்ற முதுபேரறிஞர்களே ஏறுதற்குறியது. ஏறிச் சமயவாதம் புரிவது.

**"ஒட்டிய சமயத்து உறு பொருள் வாதிகள் பட்டிமண்டபத்துப் பாங்கறிந் தேறுமின்"** என்று ஐம்பெருங்காப்பியங்களுள் ஒன்றான மணிமேகலையில் விழாவறை காதையுட் சொல்லப்பெறுகிறது. **"பன்னருங்கலைதெரி பட்டிமண்டபம்"** என்று கம்பநாடரும் கூறுகின்றார்.

**"தெற்கில் வாயில் திறவாத பட்டிமண்டபத்தோர் பொருட்டு நக்கீரர், ஒருவன் வாழவும் சாவவும் பாடி இன்னவாறாக எனச்சவித்தற் பொருட்டாய் வந்த மந்திரம் பாட்டாய் வருதலின் அங்கதமாயிற்று"** என்னும் நச்சினார்க்கினியர் உரையுள் பட்டிமண்டபம் குறிக்கப் பெறுகிறது. கல்வியிற் கரைகண்டோர் ஏறற்குரிய பட்டிமண்டபத்தில் மாணிக்கவாசகரும் வள்ளலாரும் ஏறினர். இவர்கள் பட்டிமண்டபம் ஏறியது ஞான வெற்றி. எட்டினோடு இரண்டும் அறியாத என்னைப் பட்டிமண்டபம் ஏற்றினை! ஏற்றினை! என்று மாணிக்கவாசகர் வியந்து பாடுகின்றார்.

**கட்டறுத்து எனை ஆண்டு கண்ணாரநீறு**
**இட்ட அன்பரொடு யாவருங் காணவே**
**பட்டிமண்டபம் ஏற்றினை ஏற்றினை**
**எட்டினோ டிரண்டும் அறியேனே** - திருவாசகம்.

இதனின்று இந்த அகவல் வரிகள் உணர்த்தும் உண்மை என்னவெனில், அருட்பெருஞ்ஜோதி இறைவன் நம் வள்ளல் பெருமானாருக்கு எட்டிரண்டு இன்னதென அறிவித்து வள்ளல் பெருமானாரைப் பட்டிமண்டபத்தில் ஏற்றினார் என்பதே.

**திருச்சிற்றம்பலம்**

---

**வடலூரில் திருவருட்பிரகாச வள்ளல் பெருமனாரின்**



**196ஆம் ஆண்டு**

## வருவிக்கவுற்ற நாள் விழா



**அ**ன்பு உள்ளங்களே! மனித தேகம் கொண்ட நாம் அனைவரும் இறையருளைப் பெற்று உய்வடைவதற்காக நம் வள்ளல் பெருமானார் 5-10-1823 ல் வடலூரிலிருந்து சுமார் 10கிமீ தொலைவில் உள்ள மருதூரில் இறைவனால் வருவிக்கவுற்றார்.

அதனை முன்னிட்டு ஒவ்வொரு வருடமும் அக்டோபர் மாதம் 5ம் நாள் வடலூரிலும், மருதூரிலும் சிறப்பு வழிபாடு நடந்து வருகின்றது.

இந்த வருடமும் வருகின்ற அக்டோபர் மாதம் 5ம் நாள் வெள்ளிக் கிழமை சிறப்பு வழிபாடு நடக்கவிருக்கிறது.

அவ்வமயம், அன்பர்கள் அனைவரும் தாங்கள் தங்கள் குடும்பத்தோடு வந்திருந்து குருவருளும் திருவருளும் பெற்று வாழ்வில் எல்லா வளமும் நலமும் பெற அன்போடு அழைக்கிறோம்.

# மூத்தோர்சொல் அமிர்தம்



*ஓர் ஊரில் மணியன் என்ற இளைஞன் இருந்தான். நல்லவன் என்று பெயர் எடுக்க நினைத்தான் அவன்.*

*அந்த ஊருக்குத் துறவி ஒருவர் வந்திருந்தார். அவருடைய சொற்பொழிவைக் கேட்க மணியனும் சென்றான்.*

*அவரின் அருளொழுகும் முகமும் இனிமையான பார்வையும் அன்பான சொற்களும் அவன் உள்ளத்தைக் கவர்ந்தன.*

*அவரின் திருவடிகளில் விழுந்து வணங்கிய அவன், " ஐயா! நான் நல்லவன் என்று பெயர் பெற விரும்புகிறேன். நீங்கள் என்ன செய்யச் சொன்னாலும் செய்கிறேன். எனக்கு நல்வழி காட்டுங்கள்" என்று வேண்டினான்.*

*"இளைஞனே! எழுந்திரு. உனக்கு நல்ல நாவும், நல்ல செவியும், நல்ல கண்களும், நல்ல உள்ளமும் இருக்குமானால் எளிதில் நல்லவன் என்று பெயர் பெறலாம்" என்று அன்புடன் சொன்னார் அவர்.*

*குழப்பம் அடைந்த அவன், " ஐயா! நீங்கள் சொல்வது எனக்கு விளங்கவில்லையே. நல்ல நா, நல்ல செவி, நல்ல கண், நல்ல உள்ளம் எப்படி இருக்கும்? விளக்கமாகச் சொல்லுங்கள்" என்று கேட்டான்.*

*அதற்கு துறவியார்,* **"இனிமையான சொற்களை எப்பொழுதும் பேசுகின்ற நா நல்ல நா. பிறர் புறங்கூறுவதைக் கேட்காத செவி நல்ல செவி. பிறர் மனைவியை நோக்காத கண்கள் நல்ல கண்கள். எவரிடமும் பகைமை பாராட்டாத உள்ளம் நல்ல உள்ளம்"** *என்று விளக்கம் தந்தார்.*

**கொடிய சொல் செவிபுகாது நாதம் முதலிய தோத்திரங்களைக் கேட்டல், குரூரமாகப் பாராதிருத்தல், இன்சொல்லாடல், பொய் சொல்லாமை, கோள் சொல்லாமை, தோத்திரம் செய்தல், பொறாமை அடையாதிருத்தல், அன்னிய உயிர்களுக்குத் தீங்கு உண்டாகும்போது விலக்கல் முதலியன மனம், வாக்கு, தேகத்தால் செய்யும் புண்ணியங்களாகும். – வள்ளலார்**

**கு**ருட்சேத்திரப் போர் தொடங்கியது. கடல் போலப் படைவீரர்கள் துரியோதனன் பக்கமும் பாண்டவர் பக்கமும் அணி வகுத்து நின்றனர்.

அந்தச் சூழலில் அர்ச்சுனனுக்கு கீதோபதேசம் செய்தார் கண்ணன். எல்லோரும் அறிய அவர் கீதையைச் சொன்னார். அதைக் கேட்டது அர்ச்சுனனும் அந்தத் தேரில் பறந்து கொண்டிருந்த கொடியில் இருந்த அனுமனும்தான்.

“சுவாமி! இவ்வளவு அரிய நல்ல செய்திகளைக் கேட்டும் அதில் பலவற்றை மறந்து விட்டேனே” என்று புலம்பினான் அர்ச்சுனன்.

கொடியில் இருந்த அனுமன் “அர்ச்சுனா! எல்லாம் எனக்கு நினைவில் இருக்கிறது. உனக்கு எந்தெந்தப் பகுதி மறந்து விட்டது? சொல். நான் விளக்குகிறேன்” என்றார்.

இதைக் கேட்ட கண்ணன் “அனுமனே! நான் உனக்கு இந்த அறிவுரைகளைச் சொல்லவில்லையே. அர்ச்சுனனுக்குத்தானே சொன்னேன்” என்று வியப்போடு கேட்டார்.

நான் கேட்க வேண்டும் என்ற ஆர்வத்தில் கேட்கவில்லை. நல்ல செய்திகளை, அறிவுரைகளை நீங்கள் வழங்கினீர்கள். **நான் அதில் ஈடுபாடு கொண்டேன்.** அதனால் எல்லாச் செய்திகளும் என் உள்ளத்தில் நன்கு பதிந்து விட்டன” என்று பதில் சொன்னார் அனுமன்.

**எனைத்தானும் நல்லவை கேட்க அனைத்தானும்**
**ஆன்ற பெருமை தரும்.**

எவ்வளவு சிறிதே ஆயினும் நல்லவற்றைக் கேட்டறிய வேண்டும். அங்ஙனம் கேட்ட அந்த அளவிற்கு அவை நிறைந்த பெருமையைத் தரும்.



## அன்பர்களுக்கு ஓர் வேண்டுகோள்




அன்பு உள்ளங்களே! கடந்த 11 ஆண்டுகளாக அன்பர்களின் தயவால்தான் நமது மாத இதழ் நடைபெற்று வருகின்றது. ஆனால் பெரும்பாலான அன்பர்கள் நமது மாத இதழுக்கு சந்தா செலுத்தாமலேயே உள்ளனர்.

இருப்பினும் இதுவொரு ஆன்மீக மாத இதழ் என்ற காரணத்தினால் அவர்களுக்கும் தவறாது அனுப்பிக்கொண்டுதான் இருக்கிறோம். இதை உணர்ந்து அன்பர்கள் நிலுவையிலுள்ள தங்கள் தொகையை தெரிந்துகொண்டு சந்தா தொகையினை செலுத்தி இம்மாத இதழ் தொடர்ந்து நடைபெற உதவுமாறு அன்போடு வேண்டுகின்றோம்.

சந்தாகால விபரம் பற்றி அறிய புத்தகத்தின் பின் அட்டையில் தங்கள் முகவரியின் கடைசி வரியினை காண்க.

மேலும் விபரங்களுக்கு தொடர்பு கொள்ளவும் **8012680865**

# திருமந்திரம்



**சாற்றுஞ்சன் மார்க்கமாந் தற்சிவ தத்துவந்**
**தோற்றங்க ளான சுருதிச் சுடர்கண்டு**
**சீற்ற மொழிந்து சிவயோக சித்தராய்க்**
**கூற்றத்தை வென்றார் குறிப்பறிந் தார்களே. - யார் சன்மார்க்கி?**

**ஆ**ன்மாவாகிய தானும் சிவமும் வேறல்ல என உணரும் நிலையை எய்துவிப்பதே சன்மார்க்கமாம். வேதத்தில் ஒளி விளங்க ஏத்தப் பெறும் அச்சிவத்தின் பல்வேறு வடிவங்களான தெய்வங்களைக் கண்டு மகிழ்ந்து, கோபம் முதலிய ஆறு பகைகளை வென்று, சிவயோகம் புரியும் சித்தராய் விளங்கி, இறப்பை வென்றவரே சன்மார்க்கத்தின் கருத்தை (சாரத்தை, அனுபவத்தை) அறிந்தோர்.

**கானுறு கோடி கடிகமழ் சந்தனம்**
**வானுறு மாமல ரிட்டு வணங்கினும்**
**ஊனினை நீக்கி உண்பவர்க் கல்லது**
**தேனமர் பூங்கழல் சேரவொண் ணாதே. - கிரியை**

**ம**ண்ணும் விண்ணுமாகிய எங்கணும் நறுமணம் கமழும் சந்தனமும், அத்தகைய சிறந்த மணம் கமழும் நறுமலரும் கைக்கொண்டு நாள்தோறும் வழிபட்டாலும் தம்மை அடிமையென்று கொண்டு, பிற உயிர்களைக் கொல்லாமலும் கொன்றதைத் தின்னாமலும் இருப்பதாகிய ஜீவகாருண்ய நெறியைக் கடைபிடித்து இறைவனை நிணைப்பதாகிய திருவுடையார்க்கு அன்றி திருவருள் வீழ்ச்சியாகிய சத்திநி பாதம் கிட்டாது. சத்தி - திருவருள். நிபாதம் - நன்றாய்ப் பதிதல்; வீழ்ச்சி.

**கிடக்கும் உடலிற் கிளரிந் திரியம்**
**அடக்க லுறுமவன் தானே யமரன்**
**விடக்கிரண் டின்புற மேவுறு சிந்தை**
**நடக்கின் நடக்கும் நடக்கு மளவே - இந்திந்திரியம் அடக்கு முறைமை**

**அ**னைத்து உயிரும் நன்னெறி எய்தும்பொருட்டு இறைவனால் அமைத்தருளப்பட்ட உடம்பின்கண் காணப்படும் பொறிகள் அந்நன்மைக்குத் துணையாகவே அமைக்கப்பட்டன. மலச்சார்பினால் அவைகள் தீயவழிகளில் செல்கின்றன. அவ்வழியில் நாமும் சென்றுவிடாது நலச்சார்பால் ஐம்புலனும் நம்மைப் பின்தொடரும் தகையினராய் ஒழுகுதல் வேண்டும். அங்ஙனம் ஒழுகுதலாவது தம்மை இறைவன் திருவடிக்கே ஒப்படைத்து மீளா அடிமையாய் வாழ்தலே. இதைத்தான் புலனடக்கம் என்றனர் நம் சித்தர்கள். இத்தகைய புலனடக்கமுள்ளவரே அமரராவர். இஃதல்லாது உள்ளம் அருந்தல் பொருந்தல்களாகிய இரண்டு இன்பத்தில் ஈடுபாடு கொண்டு அதன்வழி நடந்தால் உயிர் சக்தி வீணாகும். அவ்வுயிர் சக்தி இருக்கும் அளவே உடலும் இருக்கும். பின்னர் அழிந்துவிடும்.

திருஅருட்பிரகாச வள்ளல் பெருமானார் உபதேசித்தருளிய

# மகாமந்திரம்

இத்தருணம் ஆண்டவர் எல்லாவற்றையும் நீக்கி, எல்லோரும் மேலான இன்பத்தை அடையும் பொருட்டு, முடிவான இன்பானுபவத்திற்குச் சாதக சகாயமான திருவருள் மகாவாக்கியத் திருமந்திரத்தை தமது உண்மையை வெளிப்படக் காட்டும் மகாமந்திர வாக்கியத்தை எனக்கு வெளியிட்ட அவ்வண்ணம், எனது மெய்யறிவின்கண் அனுபவித் தெழுந்த உண்மையறிவனுபவானந்த இன்பத்தை நீங்கள் எல்லவரும் என்போல் ஐயம், திரிபு, மயக்கம் இன்றி அடைய என்னுள்ளே எழுந்து பொங்கிய ஆன்மநேய ஒருமைப்பாட்டுரிமையைப் பற்றிக் குறிப்பித்தேன் குறிப்பிக்கின்றேன்; குறிப்பிப்பேன். நமது ஆண்டவர் கட்டளை யிட்டது யாதெனில் நமக்கு முன் சாதனம் கருணை யானதினாலே, ஆண்டவர் முற்சாதனமாக

**அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி**
**தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்ஜோதி**

என்னும் திருமந்திரத்தை வெளிப்படையாக எடுத்துக் கொண்டார். தயவு, கருணை, அருள் என்பவை ஒரு பொருளையே குறிக்கும். ஆதலால் பெரிய தயவுடைய அறிவே பூரண இன்பமாம். அது ஒப்பற்ற பெருந் தயவுடைய பேரறிவேயாம். இஃது வாச்சியார்த்தம். இவ்வண்ணம் சாதனம் முதிர்ந்தால், முடிவான இன்பானுபவம் பெறுவதற்குத் தடையில்லை. “சந்ததமும் வேதமொழி யாதொன்று பற்றின் அதுதான் வந்து முற்றும்” என்னும் பிரமாணத்தால் உணர்க.

மேலும், இதுகாறும் தெய்வத்தின் உண்மையைத் தெரியவொட்டாது, அசுத்த மாயாகாரிகளாகிய சித்தர்கள் மறைத்து விட்டார்கள். சுத்தமாயாகாரியாகிய தெரிந்த பெரியோரும் இல்லை. சன்மார்க்கமும் இல்லை. சன்மார்க்கம் இருந்தால், அனுபவித்தறியாத அனுபவமும் கேட்டறியாத கேள்வியும் நாம்கேட்டிருப்போம்.

- திருவருட்பா வசனபாகம்.

**திருச்சிற்றம்பலம்**

Owned, Published & Edited by S. Mahendrababu
from Vallalar Sathya Dharmasalai, Mountain Roundway,
Thiruvannamalai Tk. & Dt. - 606 603.
and Printed by J. Radha at Subam Printers
39/1, Kosamada Street, Tiruvannamalai - 606 601.

அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்ஜோதி

# ஆன்மீக சத்சங்க விழா

அக்டோபர்
13 மாலை முதல்
14 இரவு வரை
2018

**இடம்: மணி மஹால்,**
ஹோப் காலேஜ், பீளமேடு, மணிஸ் தேட்டர் அருகில்,
கோயம்பத்தூர்.

தொடர்புக்கு:
**95977 19535, 88385 40176**



## நிகழ்ச்சி நிரல்:-

### 13-10-2018 சனிக்கிழமை:-

மாலை 05:00-05:30:- திருவருட்பா பாராயணம்,
05:31-07:00:- திருவருட்பா இசைக் கச்சேரி,
வழங்குபவர்: தயவுதிரு கலைசெல்வன் அவர்கள் & குழுவினர், சிதம்பரம்.
இரவு 07:01-08:15:- சிறப்பு சத்சங்கம்
இரவு 08:16-08:30:- தியானம் மற்றும் பிரார்த்தனை

### 14-10-2018 ஞாயிற்றுக்கிழமை:-

காலை 06:30-08:30:- அருட்பெருஞ்ஜோதி அகவல் பாராயணம்
09:00-09:15:- வரவேற்புரை
09:16-10:30:- சிறப்பு சத்சங்கம், தலைப்பு: 'அறமே கடவுள்',
வழங்குபவர்: தயவுதிரு சேதுபதி அவர்கள், பாண்டிச்சேரி.
10:31-11:45:- சிறப்பு சத்சங்கம்,
தலைப்பு: 'தவநேயம், சுத்த சன்மார்க்க நேயம், சத்தியமாம் சிவநேயம்' – ஓர் விளக்கம்
வழங்குபவர்: தயவுதிரு மு.பா.பாபு அவர்கள், சென்னை.
பகல் 11:46-01:00:- கேள்வி பதில் நேரம்
பிற்பகல் 01:01-02:00:- உணவு இடைவேளை
02:01-03:00:- காணொளி நிழற்படம்
03:01-04:30:- திருவருட்பா இசைக் கச்சேரி
வழங்குபவர்: தயவுதிரு ஜெயப்பிரகாஷ் நாராயணன் & குழுவினர், சோமந்தரைசித்தூர்.
மாலை 04:31-06:00:- சிறப்பு சத்சங்கம்,
தலைப்பு: 'வான்நோக்கி மண்வழி நடப்பவன் – இக்கால மனிதன்'
வழங்குபவர்: கோடைஇடி புலவர் தயவுத்திரு கங்கை மணிமாறன் அவர்கள், குத்தாலம்.
மாலை 06:01-06:30:- திருவருட்பா பக்தி பாராயணம் & தியானம்
இரவு 06:31-08:00:- சிறப்பு சத்சங்கம், தலைப்பு: வருவிக்கவுற்ற வள்ளலார்,
வழங்குபவர்: தயவுதிரு கிருஷ்ணன் அவர்கள், திருப்பூர். ஆசிரியர் 'அமுதசுரபி' பத்திரிக்கை.
இரவு 08:01-08:30:- ஜோதி வழிபாடு.

திருநாள் நினைத்தொழும் நன்னாள் – திருவருட்பா அனைவரும் வருக! திருவருள் பெறுக!

Vallalar Sanmarga Gnanamurasu, Tamil Monthly September 2018, RNI TNTAM/2007/21626 DRO.R.C./C3/74857/05
PR No.TRL/11/2017-19 Posted at Tiruvannamalai on 16th of every month,
WPP License No. TN/PMG(CCR)/WPP 582/2018-2019
Published on 15th of every month, Printed pages 28 ( including 4 cover pages).

அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி
தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்ஜோதி



திருவருட்பிரகாச வள்ளலாரின்

## வருவிக்கவுற்ற தின விழா

அன்பு உள்ளங்களே! மனித தேகம் கொண்ட நாம் அனைவரும் இறையருளைப் பெற்று உய்வடைவதற்காக நம் வள்ளல் பெருமானார் 5-10-1823ல் வடலூரிலிருந்து சுமார் 10கிமீ தொலைவில் உள்ள மருதூரில் இறைவனால் வருவிக்கவுற்றார்.

அதனை முன்னிட்டு ஒவ்வொரு வருடமும் அக்டோபர் மாதம் 5ம் நாள் வடலூரிலும், மருதூரிலும் சிறப்பு வழிபாடு நடந்து வருகின்றது.

இந்த வருடமும் வருகின்ற அக்டோபர் மாதம் 5ம் நாள் வெள்ளிக் கிழமை சிறப்பு வழிபாடு நடக்கவிருக்கிறது.

அவ்வமயம் அன்பர்கள் அனைவரும் தாங்கள் தங்கள் குடும்பத்தோடு வந்திருந்து குருவருளும் திருவருளும் பெற்று வாழ்வில் எல்லா வளமும் நலமும் பெற அன்போடு அழைக்கிறோம்.

தொடர்புக்கு: 88385 40176, 63801 11475

திரு/திருமதி

Redirect to : அருள்திரு பாபு சாது
சமரச சுத்த சன்மார்க்க சத்திய சங்கம்
552/6A, வாயுலிங்கம் எதிரில், கிரிவலப்பாதை, கோசாலை கிராமம், அடிஅண்ணாமலை (Po),
திருஅண்ணாமலை – 606 604. Cell : 94434 89849, 99427 76351

சந்தா பற்றிய விபரங்களுக்கு அணுகவும்: +91 80126 80865